முருகப்பெருமான் துணை

**மகான் திருவள்ளுவர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**09.12.2022**, வெள்ளிக்கிழமை

1. தவமே தருமமே வடிவான
தன்னார்வ தொண்டு வளர்க்கும்
அவதார ஆறுமுக அரங்கனே
அண்ணலே உன்பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தேள்திங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி புகர்வாரம்
(சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் **23** ம் நாள் **09.12.2022**, வெள்ளிக்கிழமை)
தெரிவிக்க அனுகூல ஆசிதனை
தேசிகனுக்கு திருவள்ளுவர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மைபட அரங்கன் திருவடியை
ஞானத்திருவடியாக பற்றி இனிதே
நாட்டிடுவேன் உலகோர் இணைந்து வர
4. வருகவே எங்கும் எக்கணமும்
வாய்மை எனும் சக்திபட
தருமநெறி குன்றா வாழ்ந்து
தரணியோர் ஞானவான்களாவர்
5. ஆவரே அரங்கன் தேற்றிடும்
ஆற்றல்மிக்க ஞானிகளாக
அவனியில் ஞானியர் படைகள்
அளவிலாப் பெருகி இனிதே
6. இனிதே இந்தப் பேருலகம்
இறையன்பு மிக்க பூமியாக
கனிவேலனை வணங்கும்
கருணை கொண்டவர்கள் நிறைந்த
7. நிறைந்த ஞானத் தலைமையாக
நிலவுலகம் மாற்றம் காணும்
குறைவிலா இயற்கை பலமும்
குழப்பமிலா ஞானவான் ஆளுமையுமாக
8. ஆகவே உலகம் சிறந்து
ஆளுமை என்பது முருகப்பெருமான்
யுகமாற்றம் நிகழ்த்தும் வண்ணம்
உயர்நிலையாக விளங்கி
9. விளங்கியே மாற்றம் காணும்
வினவிட சமத்துவ சமதர்ம
களங்கமிலா ஞான ஆட்சியாக
கலியுகம் ஞானயுகமாக மாற்றம் பெறும்

10. மாற்றம் தரும் மாதவசி அரங்கன்
மகத்துவமிக்க அன்னதான சேவை
ஆற்றல்தனை உலகோர் அடைந்து
அகிலம் தனில் வளர்த்தால் போதும்

11. போதுமப்பா எங்கும் மாற்றம்
புண்ணிய வழிகளாக மாறி
பூதலம் எங்கிலும் தருமபலம் கூடும்
புகன்றிய அனுகூல ஆசி முற்றே

–சுபம்–